மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# திருவாசகத்தில் திருக்குறளின் தாக்கம்

ம. தமிழ்ச்செல்வி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,
கோவை

## முன்னுரை

பன்னிரு திருமுறைகளில் பலராலும் பலகாலும் ஓதப்பெற்று வரும் அருள் நூல் மாணிக்கவாசகப் பெருமான் எழுதிய திருவாசகம் ஆகும். மக்களைப் பிறவியாகிய கடலில் இருந்து மீட்டெடுத்து முத்திக் கரையில் சேர்ப்பிக்கும் உயரிய புணையாகத் திருவாசகம் திகழ்கிறது. படிப்போரையும் பரவசப்படுத்தி அவர்களின் உள்ளங்களை நெகிழ்வித்து இறையருளில் தோய்க்கும் திருமுறையே திருவாசகம் ஆகும். "திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார" என்னும் பெருமையினைப் பெற்ற எட்டாம் திருமுறையாம் திருவாசகத்தில் பொதிந்துள்ள திருக்குறள் கருத்துகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## திருவாசகம்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒவ்வொரு திருமுறையும் ஒவ்வொரு வகையில் தனித்தன்மை பெற்று விளங்கும். அவ்வகையில் பாடுவோர், கேட்போரையும், சிந்தித்து உணர்வாரையும் அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி

உயர்நிலையில் உறுதிபெறச் செய்யும் தனித்தன்மையில் விளங்கி நிற்பது திருவாசகமாகும். இத்திருவாசகம் சிவபுராணம் முதலாக அச்சோப்பதிகம் ஈறாக 51 பதிகங்களையும் அவற்றுள் அறுநூற்றைம்பது பாடல்களையும் கொண்டு விளங்குகிறது. ஓதற்கு எளிமையாகவும், உணர்தற்கு அரிதாகவும் இருக்கும் காரணம் பற்றியே திருவாசகம் முற்றோதல் நடைபெறுகிறது.

**திருக்குறள்**

மக்களின் வாழ்க்கைக்கு உகந்த நற்பண்புகளை அறிவுறுத்தும் இலக்கியங்கள் அற இலக்கியங்கள் என்றும் நீதி இலக்கியங்கள் என்றும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் வழங்கப்படுகின்றன. இந்நூல்களுள் வாழ்வில் பின்பற்றி உயர்வு அடையத்தக்க சிறந்த கருத்துகளை எடுத்துரைப்பது திருக்குறள். சுருக்கமான அடிகளில் விரிவான பொருளை அளந்து காட்டும் சிறந்த நூலாகத் திருக்குறள் விளங்குகிறது. மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்பது. மக்கள் வாழ்வில் அடையத்தக்க உறுதிப் பொருள்கள் நான்கில் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் விரித்து உரைப்பது. எனவே முப்பால் எனும் பெயர் பெற்றது. இத்தகு சிறப்புடைய திருக்குறளின் தாக்கம் திருவாசகத்தில் பல இடங்களில் காணமுடிகிறது.

**திருவடி வணங்குதல்**

சிறுபொழுதும் என் நெஞ்சில் நின்றும் அகலாதவனும் இதயத்தாமரையில் எழுந்தருளியிருக்கின்றவனுமாகிய இறைவன் திருவடி வாழ்க என்று மாணிக்கவாசகப் பெருமான் இறைவனின் திருவடியை,

"இமைப்பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க"

(திருவாசகம், சிவபுராணம், பாடல் அடி. 2)

என்று குறிப்பிட்டிருப்பது,

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

(திருக்குறள், கடவுள் வாழ்த்து குறள். 3)

என்ற திருக்குறளை நினைவூட்டுகிறது.

இறைவன் புகழாகிய சிவபுராணத்தை மனதார நினைந்து வாயார உரைத்தால் ஆகாமிய சஞ்சிதமாகப் பரிமாகப்பட்டு இருக்கின்ற வினைகள் அனைத்தும் தத்தம் வலிகுன்றித் தேய்ந்து போகும் என்பதனை,

"முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்"

(திருவாசகம், சிவபுராணம், பாடல் அடி. 20)

என்று மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தில்,

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

(திருக்குறள், கடவுள் வாழ்த்து குறள். 5)

என்னும் திருக்குறள் மிளிர்கிறது.

### அவா அஞ்ஞானத்தின் காரியம்

அடியவர்கள் மேனிலை எய்தமுடியாத வண்ணம் தடை செய்து நிற்பது அவா. அதனை அறுத்தல் ஒன்றே அடியார்களை உய்விக்கும் நெறி. அவா அஞ்ஞானத்தின் காரியம் அஞ்ஞானம் ஆணவ மலத்தினால் விளைவது. ஆதலால் ஆணவ இருளைக் கொடுத்து அறியாமையைப் போக்கினால் ஆசையறும். இதற்குச் சிவஞான உபதேசமும், திருமந்திர சாதனையும் சிறந்த சாதனங்கள் எனத் திருவுள்கொண்டு அவற்றை அருளச் சிவசூரியன் இவ்வுலகில் ஆசான் மூர்த்தியாக எழுந்தருளினான் என்னும் கருத்தை,

"அந்தரத் தேநின் றிழிந்திங் கடியவ ராசைய றுப்பான்"

(திருவாசகம், குயில்பத்து, பாடல் எண். 5)

என்னும் திருவாசக அடி விளக்குகிறது.

### இறைவன் திருவடி பற்றல் வேண்டும்

பற்றற்றான் பற்றினைப் பற்றுதல் அப்பற்று விடற்கு ஏதுவாகும் என்ற உண்மையை வற்புறுத்த,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

(திருக்குறள், துறவு. குறள். 349)

எனக் காரணகாரிய முறைப்படி திருவள்ளுவர் ஓதியது போல மாணிக்கவாசகரும் இறைவனின் திருவடிக் கழல்களைப் பற்றுபவர் வியனுலகம் கடப்பர் என்னும் கருத்தினை,

"மின்னே ஏனைய பூங்கழல்கள்
அடைந்தார் கடந்தார் வியனுலகம்"

(திருவாசகம், ஆனந்தமாலை, பாடல் எண் : 1)

என்ற அடிகளில் குறிப்பிட்டுள்ளார். திருவள்ளுவர் பற்று என்று கூறியதை மாணிக்கவாசகர் வியனுலகம் என்கிறார்.

### பிறவாமையை வேண்டுதல்

திருவருளோடு கூடி ஒன்றாயினர் கன்மபூமியில் மீண்டும் பிறந்து வருந்தாராதலின் வீட்டுநெறி மீண்டு வாராதவழி ஆன்மாக்களுக்குப் பிறவா வரத்தை அருளுபவன் சிவன் என்பதனை,

"மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்"

(திருவாசகம், கீர்த்தித்திருவகவல் அடி. 117-118)

எனவும்,

"மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே"

(திருவாசகம், சிவபுராணம், அடி. 87)

எனவும் மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தில்,

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்பிடுவர்
மற்றீண்டு வாரா நெறி"

(திருக்குறள், மெய்யுணர்தல். குறள் 6)

என்னும் திருவள்ளுவரின் கருத்து ஒத்திருக்கிறது. இதனால் பிறவாமையை வேண்டும் நெறி நம் மக்களிடையே பன்னெடுங்காலமாக இருந்து வந்ததனை அறியமுடிகிறது.

**காலத்தே கடமையைச் செய்தல்**

எண்ணவும் முடியாத நல்ல காலம் கிடைத்த போதே இறைவன்மீது அன்பு செலுத்தி உய்யுங்கள். உலகமுண்ட பெருவாயனாகிய திருமாலும், நான்கு முகங்களை உடையவனாகிய பிரமனும் ஏனைய தேவர்களும் அணுகுதற்கும் அரிய ஆலகாலவிடத்தைப் பருகிய பெருமானாகிய இறைவன் அனைவருக்கும் திருவருள் இன்பத்தை வழங்குகிறான். எனவே காலத்தோடு அன்பு செய்து உய்யுங்கள் என்பதனை,

"காலமுண் டாகவே காதல் செய்.
துய்மின் கருதரிய"

(திருவாசகம், திருப்பாண்டிப் பதிகம். 5)

என மாணிக்கவாசகப் பெருமான் குறிப்பிடுகிறார். இதே கருத்தினை,

"வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல"

(திருக்குறள், துறவு. குறள். 242)

என்று திருவள்ளுவரும் கூறியுள்ளார். காலம் பெற என்பது இளமைக்காலத்திலேயே எனப் பொருள் தருகின்றது. இதனால் மனித வாழ்வில் இளமைக்காலம் என்பது பல சாதனைகளைப் புரியவதற்குரிய காலம் என்பதை மனித உலகிற்கு பதியச் செய்துள்ளார்.

**உயிர்களின் துன்பம் துடைத்தவன்**

"சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லறுத் தாட்கொண்டு

பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரை மாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே"

(திருவாசகம், கண்டபத்து, பாடல் எண். 5)

இப்பாடலில் சாதிகுலம் பிறப்பு என்கின்ற நீர்சூழலிலே அகப்பட்டுத் தடுமாறுகின்ற ஆதரவற்ற அடியார்களின் (உயிர்களின்) துன்பங்களைத் துடைத்து ஆட்கொண்டு பேதைமை, குணம், உருவத்தால் பிறர் யான் எனது என்கின்ற சொல்லே இன்றாகக் கெடுத்து குற்றம் அற்ற அமுதம் போன்றவன் இறைவன் என மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார்.

பேதைமையென்று சொல்லப்படுவது ஒருவனுக்கு ஏனைக் குற்றங்கள் எல்லாவற்றினும் மிக்கது. அது தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதல் ஆகும். இதனை,

"பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
டூதியம் போக விடல்"

(திருக்குறள், பேதைமை, குறள். 831)

என்றும்,

"நாணாமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும்
பேணாமை, பேதை தொழில்"

(திருக்குறள், பேதைமை , குறள். 833)

என்ற குறள்வழி விளக்குகிறார் திருவள்ளுவர்.

"கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்"

(திருவாசகம், போற்றித் திருவகவல், பாடலடி. 35)

என்று மாணிக்கவாசகம் குறிப்பிட்டிருப்பதை,

"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்
என்ன பயனு மில"

(திருக்குறள், குறிப்பறிதல், குறள். 1100)

என்று திருவள்ளுவரும் குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறள் பல பெருமைகளைக் கொண்ட சிறந்த நூல். அதனால் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும்வகையில் பலரும் திருக்குறளைக் கற்றுப் பிறவியைப் பயனுடையதாக்கினர். அதனால் பிற்கால இலக்கியங்களிலும், காப்பியங்களிலும், சமயநூல்களிலும் திருக்குறளின் தாக்கம் அதிகம் உள்ளது.